வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சித்திரபானுவூ ஆனிமீ ௮௳ திங்கட்கிழமை

## "சில்லறைக்"காசு இல்லையாம்?

இக்காட்களில், காசை உழைப்பதைக் காட்டிலும் சில்லறைக் காசை மாற்றிப் பெற்றுக் கொள்வதே அதிக கஷ்டமாயிருக்கின்றது. சந்தையிற் கடைகளிற் போய் ஏதும் பொருள் பண்டம் விலைக்குத் தரும்படி கேட்டால் வியாபாரிமார் கடைக்காரர், பண்டங்களைத் தருமுன், பொருள் கொள்ளப் போனவரை நோக்கி "உம்மிடத்திற் சில்லறை உண்டோ" என்று வினவுகிறார்கள்; இவர் "ஓம்" என்றால், அவர் சில்லறையை வாங்கிக் கொண்டு பண்டத்தைக் கொடுக்கின்றார்; இவர் சில்லறை யில்லையென்றால், அவரும் "எம்மிடத்திலும் சில்லறையில்லை, பொருள் தரமுடியா"தென்கிறார். இப்படிச் சில்லறை நாணயங்கள் முட்டுற்றதற்குக் காரணம் ஊரவர்களுட் பலர் தங்களிடத்தில் அகப்பட்ட நாணகங்களை வெளிவிடாது சேமித்து வைத்திருக்கின்றனரென அதிகாரிகள் ஓலமிடுகின்றார்கள்; அதிகாரிகள் ஓலமிட்டதோடு மாத்திரம் அமையாது சில்லறை நாணகங்களைக் குறித்த ஒரு தொகைக்குமேல்வெளிவிடாது ஒளித்து வைத்திருப்பவர்களுக்கு அபராதமிடுதலாகிய பிரமாணத்தையும் சில காலமாகப் பிறப்பித்துள்ளார்கள்; அங்ஙனம் பிறப்பித்தமையினாற் சில்லறைப் பணஞ் சேர்த்து மறைத்து வைத்திருந்தோர் சிலர் தாம் மறைத்து வைத்திருந்த பணத்தோடு அபராதத்தையும் இறுத்தனர்; இங்ஙனமெல்லாஞ் செய்தும் இன்னும் சில்லறை நாணகங்கள் அருமையாகவே வழங்குகின்றன.

அரசினர் இதனை யுத்தேசித்து 50 சத கோட்டு 25 சத கோட்டு, பின்னர் 10 சத கோட்டு ஆகிய இவைகளையும் வெளியிட்டனர்; வெளியிட்டுமென்ன? ஐந்து சத நாணகம் ஒரு சத நாணகமாகிய இவைகளைக் காண்டல் அரிதாய்விட்டது. இதனால் இப்பொழுது அதிகாரிகள் ஐந்து சத நோட்டும் அச்சிட்டு வெளியிடுதற்காகிய ஆயத்தங்களைச் செய்கின்றார்களாம். கமது அரசினர் ஒருசத நோட்டையும் அடித்து வெளியிடலாமோ என்று யோசித்தவிடத்தில் ஒரு சதத்திற்கு நோட்டடிக்கும் செலவு அதிகப்படுமென்றும், அப்படியான நோட்டை உபயோகிப்பதனால் சனங்களுக்குக் கஷ்டமாயிருக்குமென்றும் அஞ்சுகின்றனர்; தாமிரம் (செம்பு) இப்பொழுது நடக்கும் யுத்தத்திற்கு இன்றியமையாதிருப்பதால், இரும்பில் ஒரு சத நாணகம் அடிக்கலாமோவெனின், இரும்பிலே அரசன்முடி இலக்கம் எழுத்துக்கள் இலகுவிற் பதியமாட்டாவென்ற காரணத்தினால், அதுவும்ஒதுக்கப்படலாயிற்று; நடுவில் துவாரமுள்ளதும் இப்பொழுதுள்ள சதத்தைக் காட்டிலும் பாரம் குறைந்ததுமான நாணகத்தை அடித்து வெளியிடலாமோவெனின் அப்படிச் செய்தற்கும் சில மாசங்கள் செல்லவேண்டுமென்று அதிகாரிகளே தெரிவிக்கின்றனராம்; இங்ஙனமெல்லாமிருத்தலினால், யுத்தம் முடியும்வரை சில்லறை நாணகப் பஞ்சம் நீடிக்குமென்றே நம்பவேண்டியிருக்கின்றது.

இனி, இற்றைக்குச் சில தினங்கட்குமுன்னர் நமது தேசாதிபதி பின்வரும் அறிக்கையை அரசினர் விசேஷ கசெற் பத்திரிகையில் வெளியிட்டுள்ளார்:—

"இந்த 1942-ம் ஆண்டு ஜகவரி மாசம் முதலாந்தேதி வெளியிட்டனவாகிய ஐம்பது சத நோட்டுக்களும் 25 சத நோட்டுக்களும் வருகிற யூலாய் மாசம் 15-ந் தேதிக்குப்பின் செல்லமாட்டா" என்பதாம். இவை எங்ஙனமானாலும் அரசினர் என்ன சங்கடம் நேர்ந்தாலும் இப்பொழுது வழங்கும் செம்பு நாணகமாகிய சதத்தையுஞ் சிதைய விடுதல் நாட்டிலுள்ள செல்வக் கேட்டிற்கு உற்பாதமாமென அஞ்சக்கிடக்கின்றதெனலாம்.

## தந்திக் கட்டண விகிதத்தில் மாற்றம்

1942-ம் ஆண்டு ஜுன் மீ 19ந் திகதி நடுச்சாமத்திலிருந்து தந்திகளின் நீளம், நீளமின்மை எவ்வாறிருந்தாலும் ஒவ்வொரு தந்திக்கும் 15 சத விதம் கட்டணம் கூட்டப்பெற்றிருக்கிறது.

அதே நேரத்தில் உள்நாட்டு அவசியத் தந்திகளுக்கும் இந்திய எக்ஸ்பிரஸ் தந்திகளுக்கும் அவற்றின் நீளம் நீளமின்மை எவ்வாறிருந்தாலும் தந்தி ஒன்றுக்கு 30 சதவீதம் கட்டணங் கூட்டப்பெற்றிருக்கிறது.

2. புதிய கட்டண விகிதங்கள் வருமாறு:-

உள்நாட்டுச் சாதாரண தந்திகள் முதற்பத்துச் சொற்களுக்கு 50 சதம். மேலதிகமான ஒவ்வொரு சொல்லுக்கும் 5 சதம் கூட.

உள்நாட்டு அவசியத் தந்திகள்... முதற் பத்துச் சொற்களுக்கு 80 சதம், மேலதிகமான ஒவ்வொரு சொல்லுக்கும் 5 சதம் கூட.

இந்திய சாதாரணத் தந்திகள்:

முதற் 12 சொற்களுக்கு ரூ 1 சதம் 15. மேலதிகமான ஒவ்வொரு சொல்லுக்கும் 10 சதம் கூட.

இந்திய எக்ஸ்பிரஸ் தந்திகள்:

முதற் 12 சொற்களுக்கு ரூ 2 சதம் 30. மேலதிகமான ஒவ்வொரு சொல்லுக்கும் 15 சதம் கூட.

2. பதில் தரக்கூடியதாக முன்னரே காசு கட்டி அடிக்கும் தந்திகளுக்கும் வேறு விலாசத்திற்குத் திருப்பி யடிக்குந் தந்திகளுக்கும் இவைபோன்ற பிற தந்திகளுக்கும 2ம் பந்தியிற் குறிக்கப்பட்டபடி கட்டணம் விதிக்கப்படும்.

## கிராமங்கள்தோறும் 'றேடியோப்' பெட்டிகள்

### விளம்பர அதிகாரியால் தயாரிக்கப்படுகிறது

கிராமங்களில் பொது மக்கள்கூடி றேடியோ கேட்பதற்கான திட்டமொன்றை விளம்பர அதிகாரி திரு. கே. வைத்தியநாதன தயாரித்து வருகிறார்.

கிராமங்களில் அதிகமாக ஜனங்கள் கூடுமிடங்களாகிய கடைத்தெரு முதலிய இடங்களில் ஜனங்கள் கூடிக் கேட்கும் பொருட்டு றேடியோப் பெட்டிகள் வைக்க இத்திட்டப் பிரகாரம் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் இயமாதிரியான றேடியோப் பெட்டிகள் 15 வைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

முதலில், மேற்கு மாகாணத்தில் இத்திட்டம் கடைக்குக் கொண்டு வரப்படும். இது இவெற்றிபெறுமானால், மற்ற மாகாணங்களிலும் இத்திட்டம் கடைக்குக் கொண்டுவரப்படும்.

தங்கள வேலைகளைச் செய்துமுடித்து வீட்டுச் சாயங்கால வேளையில் பொதுமக்கள் றேடியோ கேட்பதற்கு அனுகூலமாகக் கொழும்பின் நிழ் சிங்கள நிகழ்ச்சிகளை மாலை 5-15 மணிக்கும் 8 மணிக்குமிடையே ஒலிபரப்ப விளம்பர அதிகாரி ஏற்பாடு செய்திருக்கிறார்.

கொழும்பு நகரசபை மார்க்கெட்டுகளிலும் இம்மாதிரியான றேடியோப் பெட்டிகளை வைக்க உத்தேசிக்கப்படுகிறது.

## சர்வகலாசாலைச் சபைக்கு அங்கத்தினர்

### சென்ற கூட்டத்தில் தெரிவு

வைத்திய தத்துவ சபைக்குப் பிரதிநிதிகள் நியமனம்

இலங்கை வைத்திய சபையின் விசேஷ கூட்டம் சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்றபொழுது சர்வகலாசாலைச் சபையின் அங்கத்தவர் தெரிவு செய்யப்பட்டனர். சர்வகலாசாலையின் வைத்தியத் தத்துவச் சபைக்கும் அங்கத்தினர் நியமிக்கப்பட்டனர்.

டக்டர். பிராங்க் குணசேகராவும் டக்டர் ஈ. வ. குரேயும், சர்வகலாசாலைச் சபையின் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

டக்டர். வி. கேபிரியேல், டக்டர். என். அட்டிகலே, டக்டர். ஜே. என். ஆர். குணவர்த்தன ஆகிய மூவரும் வைத்திய தத்துவச் சபைக்கு இலங்கை வைத்திய சபையின் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டனர்.

வைத்திய தத்துவச் சபையின் முதலாவது கூட்டம் அடுத்த வெள்ளிக்கிழமை டக்டர். ஜயவர்த்தன ஆகிய மூவரும் வைத்திய தத்துவச் சபைக்கு இலங்கை வைத்திய சபையின் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டனர்.

வைத்திய தத்துவச் சபையின் முதலாவது கூட்டம் அடுத்த வெள்ளிக்கிழமை டக்டர். ஜயவர்த்தன ஜென்னிங்ஸ் தலைமையில் நடைபெறும் அப்பொழுது அத்தியக்ஷகர் சொற்பொழிவாற்றுவார்.

இக்கூட்டத்தில் வைத்திய தத்துவ அதிகாரி தெரிவு செய்வாரெனத் தெரிகிறது.

### மற்றும் அங்கத்தவர்கள்

சர்வகலாசாலைச் சட்ட அமைப்பின்படி வைத்திய தத்துவச்சபையின் அங்கத்தினர் 15 பேருக்கு மேற்படக்கூடாதெனத் தெரிகிறது இலங்கை வைத்தியசபையால் நியமிக்கப்பட்டுள்ள மூன்று அங்கத்தினரைத் தவிர்த்து வைத்திய சுகாதார டைரெக்டரும் வைத்தியக்கல்லூரியின் பேராசிரியர்கள் அறுவரும் முழுநேரவேலை பார்க்கும் மூன்று போதனாசிரியர்களும் சபையின் அங்கத்தினராவர், சர்வகலாசாலையிலிருந்தும் ஓர் அங்கத்தவர் அல்லது அதற்கு மேற்பட்ட சிலர் நியமிக்கக்கூடும்.

இப்போதைய ஏற்பாட்டின்படி அரைநேர வேலை பார்க்கும் வைத்தியக்கல்லூரிப் போதனாசிரியர்கள் வைத்தியத் தத்துவச் சபைக்கு உட்படுத்தப்படவில்லை.

## சட்டம் மீறும் தேசங்களைத் தண்டிக்க

### 'சர்வதேசப்பொலிஸ்படை வேண்டும்'

ஸ்ரீமதி. சியாங்கின் ஆதரவு

பம்பாய் ஜுன் 15

சீனக் குடியரசுத் தலைவர் லின்ஸென் வெளியிட்ட யோசனையை விவரித்து, ஸ்ரீமதி. சியாங்கேஷேக் றேடியோ மூலம் அமெரிக்க மகாஜனங்களுக்குப் பேசுகையில், 'சட்டம் மீறுபவர்களைத் தண்டிப்பதற்காகச் சாமானிய வாழ்க்கையில் பொலிசார் இருப்பதுபோல் சட்டம் மீறும் தேசங்களைத் தண்டிப்பதற்காகச் சர்வதேசப் பொலிஸ் படை ஒன்றிருக்க வேண்டும். சமாதானத்திலும் ஒழுங்கிலும் பங்கெடுத்துக் கொள்ளுவது ஒவ்வொரு நாட்டின் கடமையாகும்.'

'இந்த யுத்தத்திலிருந்து வெள்ளம் வருமுன்பே அணைகோலுவது தான் மேலானதென்ற படிப்பினையை ஜனநாயக நாடுகள் நிச்சயமாக உணருமென்பதே நம் நம்பிக்கை. யுத்தங்களைத் தடுப்பதே முக்கியம், வெற்றி முக்கியமல்ல. ஆனால், யுத்தங்களை எப்பொழுது தடுக்க முடியும்? தங்கள் தங்கள் நாட்டிற்கு என்ற முறையில் ஒவ்வொரு நாடும் அபிவிருத்திபெறச் சமமான சந்தர்ப்பம் இருந்தால் தான் யுத்தங்களைத் தடை செய்ய முடியும். நாடுகள் உரிமைகளைப் பிற நாடுகளுடன் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். பிற நாட்டைச் சுரண்டுதல், ஏகாதிபத்தியம் இவை போன்றவற்றை யுத்தத்துக்கு முன்னிருந்தவை அடியோடு ஒழித்துவிட வேண்டும்' என்று கூறினார்.

## யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

நிகழும் "சித்திரபானு வருடம் வைகாசிமீ 32ந் திகதி (14-6-42) ஞாயிற்றுக்கிழமை சபை நிலையத்தில் கூடிய திருவாக்ஷ்சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேறின.

1. பண்ணைக்கடல் விபத்து

இவ் விபத்தில் மிக்க பயங்கரமான முறையில் உயிர்நீத்த மக்களைக் குறித்து இச்சபை மிகவும் அநுதாபப்படுகின்றது. இறந்தவர்களுடைய சுற்றமித்திரர்க்கு சபை தனது மனஸ்தாபத்தைத் தெரிவிக்கின்றது.

இவ் விபத்தைக் குறித்து ஓர் பகிரங்க விசாரணை செய்ய வேண்டுமென்றும் யாழ்ப்பாணத்திற்கும் வேலணை மண்டைதீவுக்கு மிடையிலுள்ள பிரயாண வசதிகளைத் திருப்திகரமான முறையில் நடத்த வேண்டுமென்றும் இச்சபை அரசினரைக் கேட்கின்றது.

மேற்படி விபத்தில் உயிர் நீத்த மக்களுடைய சொந்தக்காரருக்கு தேவையான பண உதவியும் பிற உதவியும் புரியும்படி இச்சபை அரசாங்கத்தாரைக் கேட்கின்றது.

மகா மகோபாத்தியாய டக்டர். உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்

பல்லாண்டுகளாக தமிழ்மொழிக்கு அரிய பெரிய தொண்டாற்றித் தமிழ் நாட்டின் கண் தமிழ்த் தாதா என அழைக்கப் பெற்ற மகா மகோபாத்தியாய டக்டர் உ. வே. சாமிநாத ஐயருடைய பிரிவைக் குறித்து இச்சபை மிகவும் மனஸ்தாபப்படுகின்றது.

வண்ணார்பண்ணைத் தபால் நிலயம்

வண்ணார்பண்ணைத் தபால் நிலயத்தில் தனித்து ஒரு உதவிபோஸ்தர் அக்கிலயத்திலுள்ள கடமைகளைப் பார்ப்பது கஷ்டமாயிருப்பதனால் அக்கிலயத்தில் தங்கள் கடமைகளை முடிக்கச் செல்லும் பொது ஜனங்கள் சுணக்கமின்றி அவற்றை முடிப்பதற்காக இன்னொரு தபால் உத்தியோகஸ்தரை அங்கு உதவியாக நியமனம் செய்து தரும்படி இச்சபை அரசாங்கத்தாருக்கு விண்ணப்பஞ் செய்கின்றது.

பு. மயில்வாகனம்
காரியதரிசி

## சம்பள நிர்ணயச் சபைகள்

### அடுத்த வருட முற்பகுதியில் ஸ்தாபிக்கப்படலாம்

சென்ற வருடம் பிரகடனஞ் செய்யப்பட்ட சம்பள நிர்ணயச் சபைச்சட்டத்தின் 8வது பிரிவின் பிரகாரம் சம்பள நிர்ணயச்சபைகளை ஸ்தாபிக்கும் வேலையை நடத்தத் தொழில் வர்த்தக மந்திரி தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

சென்ற மாதம் இதையொட்டி மந்திரிக்கும் தோட்டத்தொழிற் பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெற்ற மகாநாட்டில் குறித்த பிரதிநிதிகள் இம்முறை சம்பந்தமாகச் சில ஆட்சேபனைகளைத் தெரிவித்தனர். இவ்வாட்சேபனைகளை நன்கு பரிசீலனை செய்தபின்னரே சம்பள நிர்ணயச் சபைகளையேற்படுத்த மந்திரி தீர்மானித்திருப்பதாக அவர்களுக்கறிவிக்கப்பட்டது.

சம்பள நிர்ணயச் சபையை ஏற்படுத்துவதை 8 மாத காலம்வரை பின்போட்டு வைக்கும்படி இலங்கைத் தோட்டமுதலாளிகள் சங்கமும் சமபூமி விளைபொருட் சங்கமும் கோரியிருக்கின்றன.

சட்டத்தின் 8வது பிரிவின்படி உடனே நடவடிக்கையெடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பினும் சம்பள நிர்ணயச்சபைகளின் சட்ட அமைப்புகளையொட்டிப் பலமுறைகளை அனுஷ்டிக்க வேண்டியிருப்பதை முன்னிட்டுச் சபைகள் அடுத்தவருட முற்பகுதிக்கு முன்னர் வேலை ஆரம்பிக்கப்படமாட்டாவெனத் தோற்றுகிறது.

# மீண்டும்ஜக்கிய அமெரிக்காவுக்கு சர்ச்சிலின் விஜயம்

## ஜனாதிபதியுடன் யுத்தம் சம்பந்தமான மகாநாடுகள்

### இரண்டாவது போர்முனையை ஆரம்பிப்பது பற்றியும் விவாதிக்கப்படும்

மிஸ்டர். ரூஸ்வெல்டின் காரியதரிசி அறிக்கை

லண்டன், ஜூன். 18—

மிஸ்டர். சர்ச்சில் ஐக்கிய அமேரிக்கா சேர்ந்து விட்டாரென்ற உத்தியோக முறையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மிஸ்டர். சர்ச்சிலுடன் ஜெனரல் ஸேர். அலன்புருக் மேஜர்ஜெனரல் ஸேர்-ஹேஸ்டிங்ஸ் இஸ்மே பிரிகேடியர் ஜெனரல் ஸ்டிவார்ட் ஸேர். சார்ள்ஸ் வில்ஸன், மிஸ்டர். ஜோன் மார்ட்டின் கமாண்டர் தோம்ஸன் ஆகியோரும் சென்றிருக்கின்றனர்.

மிஸ்டர். சர்ச்சிலும் ஜனாதிபதி ரூஸவெல்டும் யுத்தத்தை நடத்துவது பற்றியும் அதில் வெற்றிபெறுவது பற்றியும் மகாநாடு கூடி ஆலோசிக்கின்றனரென்று ஜனாதிபதியின் காரியதரிசியான மிஸ்டர். ஸ்டிபென் ஏர்லி தெரிவித்தார்.

ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையை ஏற்படுத்துவது பற்றியும் மகாநாட்டில் விவாதிக்கப்படவிருக்கிறதா? என்று கேட்டபொழுது 'அவர் அதற்காகவே வந்திருக்கின்றாரென்று கருதுவது மிகவும் பொருத்தமானதென்று நான் நினைக்கிறேன்' என்று மிஸ்டர். ஏர்லி பதிலளித்தார்.

மிஸ்டர். சர்ச்சில் ஐக்கிய அமெரிக்கா சேர்ந்திருப்பதை வெள்ளைமாளிகை வெளியிடுவதற்குச் சில நிமிஷங்கள் முன்னர்வரை முக்கியமான அறிக்கை எதுவும் வெளிவரவிருக்கிற தென்பதை ஜனாதிபதி வாசஸ்தலத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மறுத்தனர்.

இவ்வாரத்தில் மிஸ்டர். சர்ச்சிலிடமிருந்தாவது மிஸ்டர். ரூஸ்வெல்டிடமிருந்தாவது மேற்கொண்டு அறிக்கை எதுவும் வெளிவருமென்று தாம் எதிர்பார்க்கவுமில்லையென்று மிஸ்டர். ஏர்லி கூறினர்.

#### சடுதியில் கூட்டப்பட்ட மகாநாடு

மிஸ்டர் ஸ்டிபென் ஏர்லி மேற்படி விபரங்களை அறிவித்த பத்திரிகை நிருபர்கள் மகாநாடு நடுஜாம வேளையில் டெலிபோன் மூலம் திடீரென்று கூட்டப்பட்டதாகும்.

இதற்கு முன்னர்ப் பல மணி நேரங்களாகத் தேசியப் பத்திரிகைக் கட்டிடத்தில் ஏராளமான அறிக்கைகளும் வதந்திகளும் ஹேஷ்யங்களும் உலவின. அக்கட்டிடத்திலுள்ள பல பத்திரிகைக் காரியாலயங்களிலிருந்து டெலிபோனில் அழைப்பு வந்ததும், நிருபர்கள் தமது கோட்டுகளை மாட்டிக்கொண்டு மகாநாட்டுக்குச் சென்றனர்.

மிஸ்டர் சர்ச்சில் எதற்காக வந்திருக்கிறாரென்பதுபற்றிய விபரங்களை மிஸ்டர் ஏர்லி சரியாகத் தெரிவிக்கவில்லை. மான்ஷியர் மொலட்டோவ் வாஷிங்டனுக்கு வந்து நடத்திய முக்கிய மகாநாடுகளின் விளைவாக மிஸ்டர் சர்ச்சில் வந்திருக்கிறாரென்றும் அவர் கூறவில்லை.

#### 'காரியார்த்தமான விஜயம்'

ராய்ட்டரின் அரசியல நிருபர் கூறுவதாவது:-

யுத்தம் சம்பந்தமான மிகப் பிரதானமான தீர்மானங்களைச் செய்ய வேண்டிய சமயத்தில் மிஸ்டர். சர்ச்சில் வாஷிங்டனுக்கு விஜயம் செய்திருக்கிறார். இப்போதைய நான்கு முக்கிய பிரச்னைகளாவன:-

(1) இரண்டாவதுபோர்முனையை ஏற்படுத்தல் (2) கப்பல் போக்குவரத்து (3) சமீபக்கிழக்கு, தூரகிழக்குப் பிரதேச யுத்தத்திட்டம் (4) பிரிட்டன், ருஷ்யா, சீனா ஆகிய நாடுகளுக்கு அமெரிக்க சாமான் 'சப்ளை'கள்.

மிஸ்டர். சர்ச்சில் காரியார்த்தமாக விஜயம் செய்திருக்கிறாரென்றும் நம்புவதற்குக் காரணம் இருக்கிறது. அவர் அங்கு பொதுக்கூட்டங்களில் பேசக்கூடாதென்றும் நேசதேசங்களுக்கு ஆகாயவசனி மூலம் பேசக்கூடாதென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அவருடைய நேரத்தில் பெரும்பகுதி யுத்தத்தின் முக்கிய பிரச்னைகளைப்பற்றித் திரைமறைவில் ஜனாதிபதியுடன்கூடி ஆலோசிப்பதிலேயே செலவிடப்படும்.

சோவியத் அயல்நாட்டு மந்திரியின விஜயத்தைப் பின்பற்றி மிஸ்டர். சர்ச்சிலுடன் ஸேர். அலன்புருக் மேஜர் ஜெனரல் ஸேர். ஹேஸ்டிங்ஸ் இஸ்மே ஆகியோரும் வந்திருப்பது இன்னும் முக்கிய அம்சமாகவிருக்கிறது. மான்ஷியர் மொலட்டோவ் வாஷிங்டனுக்கும் லண்டனுக்கும் விஜயம் செய்ததின் விளைவாக "1942ம் ஆண்டில் ஐரோப்பாவில் 2வது போர்முனையொன்றை ஏற்படுத்துவது சம்பந்தமாக ஒருமுகமான முடிவு செய்யப்பட்டிருக்கிறது" என்று அறிவிக்கப்பட்டது.

நேச தேசங்களின் கப்பல் நஷ்டங்களால் ஏற்பட்டிருக்கும் பிரச்னை ஆங்கிலோ அமெரிக்கக் கூறப்படை திட்டத்தில ஒரு முக்கியமாக மதிக்கப்படும்.

#### விவாதிக்கப்பட விருக்கும் விஷயங்கள்

சமீபக் கிழக்குப் பிரதேச யுத்த அபிவிருத்திகள் பற்றியும் மிஸ்டர். சர்ச்சிலும் ஜனாதிபதியும் பரஸ்பரம் அபிப்பிராயங்களைக் கலந்து பேசிக்கொள்வார்கள். சீனாவிலும் பசிபிக் பிரதேசத்திலும் ஜப்பானியரின் ஆக்கிரமிப்பை எதிர்த்து நடைபெறும் போராட்டம் பற்றியும் விவாதிக்கப்படும். அமெரிக்காவில் அமோகமாக உற்பத்தி செய்யப்படும் யுத்த தளவாடங்களை எந்த விதத்தில் விநியோகிப்ப தென்பதைக் கண்டு கொள்வதற்காக அமெரிக்க யுத்த தளவாட 'சப்ளை'கள் விஷயமாக விவாதிக்கப்படும்.

#### சிலர் மட்டும் அறிந்த இரகசியம்

மிஸ்டர். சர்ச்சில் ஐக்கிய அமெரிக்காவுக்கு விஜயம் செய்கிறாரென்ற விஷயம் அட்லாண்டிக் சமுத்திரத்தின் இக்கரையில யுத்த மந்திரி சபையிலுள்ளவர்களுக்கும் வேறு சில உயர்தர அதிகாரிகளுக்கும் மட்டும்தான் தெரியும். யுத்தம் ஆரம்பித்த பின்னர், இப்பொழுது மூன்றாவது முறையாக மிஸ்டர். சர்ச்சில் ஜனாதிபதியைச் சந்திக்கிறார். போன தடவை அவர் டியூ ஆப்யோர்க் என்னும் யுத்தக் கப்பலில் ஒன்பது நாள் பிரயாணம் செய்து அமெரிக்காவை அடைந்து சென்ற டிசம்பர் மாதம் 22ந் திகதி யன்று வாஷிங்டனுக்கு விஜயம் செய்தார். அட்லாண்டிக் சாஸனத்தில் கைச்சாத்திடுவதற்குக் கடந்த ஆகஸ்ட்மாதத்தில மிஸ்டர். ரூஸ்வெல்டும் மிஸ்டர். சர்ச்சிலும் அட்லாண்டிக் சமுத்திரத்தில் சந்தித்தபொழுது ஏற்பட்ட நட்பும் உறவும் நீடித்து வலிவருகிறது. மிஸ்டர். சர்ச்சில் கானடாவிலிருந்து வாஷிங்டனுக்குத் திரும்பிய பின்னர் பிரிட்டனும் அமெரிக்காவும் ருஷ்யாவும் மற்றும் 23 நேசநாடுகளும் அச்சு வல்லரசுகளுடன் இறுதிவரை யுத்தஞ் செய்ய உறுதி கூறிச் செய்துகொண்ட உடன்படிக்கையில கைச்சாத்திட்டார்.

ஜனவரி மாதம் 17ந் திகதியன்று பிரதம மந்திரி ஆகாய மார்க்கமாக லண்டனுக்குத் திரும்பினர்.

## கழனி ஆலயத்திற்கு லேசர். லேட்டனின் விஜயம்

### பிருத்தானிய விமானிக்கு அபயமளித்த ஸ்தலம்

கொழும்பு, ஜுன், 18—

இலங்கைப் பிரதம தளகர்த்தரான வே. த. அட்மிரல் ஸேர். ஜியோப்ரே, லேட்டன் இம்மாதம் 20-ந் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்குச் சரித்திர பூர்வமான கழனி ஆலயத்திற்கு விஜயஞ் செய்வார்.

சென்ற ஏப்ரல் மீ 5-ந் திகதி நடைபெற்ற விமானத்தாக்குதலின போது நிகழ்ந்த உற்சாகமான சம்பவமொன்றை இவ்விஜயம் ஞாபகப்படுத்தும் ஜப்பானிய விமானங்கள் பல திசைகள் தோறும் தாக்கப்பட்டபொழுது கழனி ஆலயத்திற்கு மேல் றேயல் விமானப்படையைச் சேர்ந்த விமானமொன்று சத்துரு விமானங்களிற் பலவற்றைத் தாக்கியது. இச்சண்டையை ஆபிரக்கணக்கான மக்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். குறித்த பிருத்தானிய விமானம் தாக்குண்டதும் அதன் விமானி அதினின்று வெளியே குதித்துப் 'பாரசூட்' மூலம் ஆலயத்திற் சமீபமுள்ள தென்னந் தோட்டமொன்றில் இறங்கினர்.

அவ்விமானி தரையிறங்கியதும் ஆலயத்தைச் சேர்ந்த சங்காநித் தேரோ என்னும் பிக்குவு அவரிடஞ் சென்று தம்மாலியன்ற உதவி புரிந்தார். அவ்விமானி அவ்விடத்திற்குச் சமீபத்திலுள்ள டெலிபோனொன்றுக்குத் தம்மை யழைத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளவே பௌத்தகுரு ஆலயத்திலுள்ள டெலிபோன் அறைக்கு அவரை அழைத்துச் சென்றார்.

இதைக் கண்ட ஜப்பானிய விமானிகள் றேயல் விமானப்படை விமானியை இயந்திரப்பீரங்கியால் தாக்க ஆரம்பித்தனர்.

அப்பொழுது குறித்த குரு தமக்கேற்படக்கூடிய ஆபத்தைப் பொருட்படுத்தாமல மிக்க தைரியத்தோடு அவ்விமானியைத் தமது மஞ்சள் வர்ணமுள்ள அங்கியால் மறைத்து அவரை ஆபத்தான அப்பகுதியிலிருந்து பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் சென்றார்.

இச்சம்பவம் நிகழ்ந்த தினத்திலிருந்து இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் விமானிகளுக்குக் கழனி ஆலயம் யாத்திரைக்குரிய ஒரு ஸ்தலமாயிற்று. விமானிகள் அங்கே திரண்டு சென்று தமது தோழர்களிலொருவருக்குச் சிறந்த ஆதரவளித்த தீரக் குருவுக்குத் தமது நன்றியைத் தெரிவித்தனர்.

விளம்பரம்

1 [illegible] 1942-ம் ஆண்டு ஆடி மாதம் 18-ந் திகதி தொடக்கம் ஆடி மாதம் 28-ந் திகதிவரை நடைபெறும் என இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது. தீர்த்தம் ஆடி மாதம் 28-ந் திகதி நடைபெறும்.

2 [illegible]

3 [illegible]

4 [illegible] 1942-ம் ஆண்டு ஆனி மாதம் 12-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்கப் பத்திரிகையில் (கசெற்றில்) [illegible]

5 [illegible]

(1) [illegible]
(2) [illegible]
(3) [illegible]
(4) [illegible]
(5) [illegible]

[illegible]

6 [illegible]

7 [illegible] 36 [illegible]

8 [illegible]

[illegible]

J. R. [illegible]

[illegible]
1942-ம் ஆண்டு ஆனி மாதம் 15-ந் திகதி

G 14 22.6.42

பிரதானமானது

இலங்கை 'நக்ஸிசியரி பயனியர்ஸி'ன், யாழ்ப்பாணப்பட்டாளத்திற்கு ஆட்கள் தேவை, உணவும்உடையும் வசிக்க இடமும் இலவசமாகக் கொடுக்கப்படும். நாளொன்றுக்கு ரூபா 1 சம்பளமாகக் கொடுக்கப்படும், உயர்ந்த சம்பளவிகிதத்திற்கு உயர்த்தப்படச் சந்தர்ப்பமும் உண்டு.

கீழ்க்காணும் விலாசத்திற்கு மனுச் செய்துகொள்க.

மேஜர். E. A. லோறி,
'நிக்குறாற்றில்' காரியாலயம்.
டவுன்ஹால்,
யாழ்ப்பாணம்.

(Mis. 64. 22 & 25-6-42)

# ராஜாஜியின் சமரஸ யோசனை

## லீகுக்காரர்கள் மதில்மேற் பூனைகளாக இருப்பதேன்?

### பம்பாய்ப் பிரபலஸ்தர்கள் கருத்து

பம்பாய் ஜூன் 15

தென்னாட்டில் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் நடத்திவரும் பிரசாரத்தை இங்குள்ள ராஜீய வாதிகள் அனைவரும் கூர்ந்து கவனித்து வருகின்றனர். காங்கிரஸில் சேராதவர்களில் பெரும்பாலாரும் வியாபாரப் பிரமுகர்களில் சிலரும்கூட ராஜாஜியின் யோசனையை வரவேற்கின்றனர். ஆனால், ராஜாஜி கையாளும்முறை அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

#### தெளிவு வேண்டும்

மிதவாதப் பிரமுகர்களில் ஸர். சிமன்லால் சேதல்வாடும் இன்னும் சிலரும் முஸ்லிம்களுக்குச் சுய நிர்ணய உரிமைஅளிக்க முன்வந்திருக்கும் ராஜாஜி தமது யோசனையைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று அபிப்பிராயப்படுகின்றனர். முஸ்லிம் மாகாணங்களுக்குச் சுய நிர்ணய உரிமை வழங்க அவர் தயாராக இருக்கிறாரா அல்லது முஸ்லிம்களுக்கே வழங்கப் போகிறாரா என்பதை விவரிக்க வேண்டுமென்கின்றனர். அவர்கள் முன்னது ஸேர். க்ரிப்ஸின் திட்டம், இது சாத்தியமெனக் கருதப்படுகிறது. ஆனால், இரண்டாவது யோசனை சாத்தியமல்லவென்று கருதப்படுகிறது.

முஸ்லிம் மாகாணங்களுக்குச் சுயநிர்ணய உரிமையை வழங்குவதே ராஜாஜியின் யோசனையாயின் பம்பாய்ப் பொதுமக்களிற் பெரும்பாலோர் அவரை ஆதரிக்கலாம். ஆனால் முஸ்லிம் லீகுக்காரர்கள் ராஜாஜியின் யோசனையை வரவேற்கின்றனராயினும் மதில் பூனைகள் போலிருந்து வருகின்றனர். அவர்கள் முன்வந்து ராஜாஜியுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளவில்லையே என்று சென்னைத் தலைவர்களை ஆதரிப்பவர்கள் வருந்துகின்றனர்.

#### மதில் மேற் பூனைகள்

ஆனால், இன்னும் சிலர், ராஜாஜிக்கும் முஸ்லிம் லீகுக்குமிடையே சமரஸமேற்பட வழியேயில்லை என்று அபிப்பிராயப்படுகின்றனர். பாகிஸ்தான்தான் முஸ்லிம்களின் முதல் கோரிக்கை, கடைசிக் கோரிக்கையும் அதுவே என்றார் ராஜாஜி. ஆனால், சௌதரி கலிக்குஸ்மான் போன்ற தலைவர்கள் பாகிஸ்தான் ஆரம்பம்தானென்றும், அதைத் தொடர்ந்து முஸ்லிம்கள் பல கோரிக்கைகளை வெளியிடுவரென்றும் சொல்லுகின்றனர். முஸ்லிம்கள் ஒன்றுபட்டால் பிறகு அவர்கள் ஆப்கானிஸ்தானம் பாரஸீகம், இராக பாலஸ்தீனம், எகிப்து, துருக்கி இந்நாடுகளைத் தங்களுடன் சேரும்படி கேட்கலாமென்றும் வெளிநாட்டு முஸ்லிம்கள் இந்திய முஸ்லிம்களுடன் சேர்ந்துவிட்டால் பிறகு அந்தச் சமஷ்டி உலகிலேயே பலம் பெற்றதாக விளங்குமென்றும் சௌதரி கலிக்குஸமான சமீபத்தில் பம்பாயிற் பேசினர். ஜனாப் ஜின்னா மௌனஞ் சாதித்ததன் மூலம் இதை ஆதரித்தார். முஸ்லிம் லீகுக்காரர்களிடையே இந்த அபிப்பிராயம்தான் இப்பொழுது வலுத்து வருகிறது. ஆகவே, ராஜாஜிக்கும் லீகுக்குமிடையே சமரஸம் ஏற்படுமாவென்பது சந்தேகமாக இருக்கிறது. பிற்பாடு பெரிய கோரிக்கைகளை வற்புறுத்த விருப்பதால்தான் லீகுக்காரர்கள் ராஜாஜியுடன் கைசேர்த்துக் கொள்ளப் பின்வாங்குகின்றனர் என்று சிலர் கூறுகிறார்கள்.

#### ராஜாஜியின் பம்பாய் விஜயம்

ஸ்ரீ பி. வி ஜோஷியின் அழைப்புக்கிணங்க ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் பம்பாய்க்கு விஜயம் செய்யவிருப்பதை அனைவரும் ஆவலுடன் எதிர்நோக்கி நிற்கின்றனர்.

—சுதேசமித்திரன்.

## இயந்திரப் பீரங்கிக் குண்டுக்குப் பலியானார்

### கோம்பனி என்ஜினியரின் கோர மரணம்

புறக்கோட்டை டயஸ் வீதியிலுள்ள மெஸர்ஸ் ஹோர் கம்பெனியைச் சேர்ந்த 28 வயதுள்ள என்ஜினியரான மிஸ்டர். ருபேர்ட் ஆதர் ஹார்ஸ் பீல்ட் மீது அகஸ்மாத்தாகப் பீரங்கிக் குண்டு பாய்ந்ததின் பலனாகச் சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அவர் மரணமானார்.

இது சம்பந்தமாகக் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் சென்ற திங்கட்கிழமை காலை மரண விசாரணை நடைபெற்றபோது விபத்துக்குள்ளாகி மரண மேற்பட்டதென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

விசாரணையின்போது ரோயல் விமானப்படையைச் சேர்ந்த பீரங்கி வீரர் சார்ஜெண்ட் ஜோன் ஹரிஸ் சாக்ஷியம் கூறியதாவது:-

சென்ற திங்கட்கிழமை மாலை 1½ மணியளவில் இரட்டை இயந்திரப் பீரங்கியைப் பரீட்சிக்கும்பொருட்டு நானும் மற்றுஞ் சிலரும் சென்றோம். காலஞ் சென்ற மிஸ்டர். ஹார்ஸ் பீல்டும் தாமாகவே எம்மைப் பின் தொடர்ந்தார். நான் பீரங்கிப் பிரயோகஞ் செய்த பொழுது, காலஞ் சென்றவரும் மற்றவர்களும் பீரங்கி ஸ்தலத்திலிருந்து ஏறக்குறைய ஒருயார் தூரத்தில் நின்றனர். நான் பீரங்கிப் பிரயோகஞ் செய்ய ஆரம்பிக்கும்போது பீரங்கி பூட்டப்பட்டிருந்த தளம் பின்புறமாக நழுவத் தொடங்கியது. இதன் பலனாகப் பீரங்கிக் குழாய்கள் கீழே நழுவ நேர்ந்தன. நான் அவற்றை மேலே உயர்த்திக் கொண்டு குதிரையைத் தட்ட முயன்றேன். இடது கை பீரங்கிப்பிரயோகஞ் செய்வதை நிறுத்தியது. ஆயின் வலதுகை பீரங்கிப் பிரயோகத்தைத் தொடர்ந்து நடத்தியது. எனவே, இயந்திரப் பீரங்கி வலது புறம் சாய நேர்ந்தது. இந்நிலையில் மிஸ்டர். ஹார்ஸ் பீல்ட் எழுந்து குறுக்கே வலது புறமாக ஓடமுயன்றார். அப்பொழுது இயந்திரப் பீரங்கியின் திசையில் அவர் செல்ல நேர்ந்தமையால் அவர் தாக்குண்டார். மற்றவர் இருந்தது போல, மிஸ்டர். ஹார்ஸ் பீல்டும் தங்கியிருந்தால் அவர் தாக்குண்டிருக்க மாட்டார்.

இயந்திரப் பீரங்கி பூட்டப்பட்டிருந்த தளத்தின் பகுதியொன்றை மிஸ்டர். ஹார்ஸ் பீல்ட் கட்டியிருந்தார். தளத்தைப் பரீக்ஷிப்பதைக் கவனிக்கும் பொருட்டு அவர் அங்கு சென்றிருந்தார்.

மிஸ்டர். ஹார்ஸ் பீல்ட் ஆஸ்பத்திரியிலனுமதிக்கப்படுமுன் மரணமானார்.

காலஞ் சென்றவர் இவ்வருடம் மார்ச் மாதம் 8-ந் திகதியிலிருந்து இலங்கையி லிருந்தார். அவரது மனைவி இங்கிலாந்தி லிருக்கிறார்.

## ஸ்ரீ சுபாஷ்போஸ்

### ஹிட்லர் முஸோலினியுடன் சந்திப்பு

லண்டன் ஜூன் 15—

ஸ்ரீ ஜுத் சுபாஷ் சந்திரபோஸ் சமீபத்தில், ஹிட்லரையும், முஸோலினியையும் சந்தித்து விட்டுப் பல்கேரியாவுக்கு வந்து சேர்ந்திருப்பதாக லண்டனுக்கு நேற்று வந்த செய்தி கூறுகிறது.

## மகோத்ஸவ முடிவிலே தீர்த்த ஸ்நானஞ்செய்தற்கு நியாயம்

### பிரம்மஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் சுதுமலை

மகோத்சவ முடிவிலே அநுஷ்டிக்க கிருத்தியமாயுள்ளது தீர்த்தோத்ஸவமாம். அஃதாவது, வினை ஒன்பது காலும் பலியிடுதலாகிய கன்மமூட்டு முகத்தால் ஐந்தொழில் நடத்திய ஆதிசத்தியாகிய அஸ்திரதேவர் மூர்த்தி முன்னிலையில் தீர்த்தத்திலுள்ளே முழுக எல்லோரும் அத்தீர்த்தத்திலுள்ளே ஸ்நானஞ் செய்கின்றார்கள். தீர்த்தம் பராசத்திவடிவாயுள்ளது. அஸ்திர தேவர் ஆதிசத்தியாகையால் அதுவரையும் ஐந்தொழிற்படுத்திப் பரிபாகம் வருவித்த ஆதிசத்தி தன்தொழில் முடிந்தபோது அருட்சத்தியிலே மூழ்க அதனோடு நாமும் அந்த அருட்சத்தியாகிய பராசத்தியில் அத்துவிதமாகச் சேருதலைக் குறிக்கும். ஆதிசத்தி நீங்க அருட்சத்தி பதிதலே சத்தி நிபாதமாகலின், தீர்த்த ஸ்நானம் அத்தன்மையைக் காட்டும் கிரியையாய் அமைந்துள்ளது. அப்படியே ஆதிசத்தி நீங்க அருட்சத்தியை யடைந்து அந்நிலையில் தோற்றும் மூர்த்தியைத்தரிசித்து ஆனந்த வாழ்வு அடைதலைக்காட்டித் தீர்த்த ஸ்நானஞ் செய்தோன் அதினின்றும் எழுந்து மூர்த்தியைத் தரிசனஞ் செய்யுமுறை தீர்த்த உத்ஸவத்து நிர்ணயிக்கப்பட்டது. மூர்த்தி ஆனமாவினிடத்து விளங்கு மென்பதனைக் காட்ட வாகனரூடராய் எழுந்தருளுவிப்பர். அருட்சத்தியோடு கூடி ஆன்மாவிற் சிவனைக்கண்டு ஆனந்தவாழ்வுபெறும் நிலையை இத்தீர்த்த ஸ்நானம் உணர்த்துகின்றது என்பதை யறிந்து கொள்க.

"மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு, வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்பது ஆன்றோர் வாக்கு. எனவே சத்தி நிபாதமிலை விளைக் காட்டுவதே தீர்த்த ஸ்நானம்.

பத்து காலும் மூர்த்தியைத் தரிசித்துத் தலவாசம்பண்ணி மலபரிபாகம் இருவினை யொப்புப் பொருந்தியவர்களுக்கே தீர்த்த ஸ்நானமாகிய சத்திநிபாத முண்டாகும். அது பற்றிப்போலும் சுவாமிகளும் மூர்த்தி தலந் தீர்த்தம் தொடங்கினர்க்கு எனக் கூறுது முறையாய்த் தொடங்கினர்க்கு என உய்த்துணரக் கூறினர்.

## பலாங்கொடை நகரில் 6 தொகுதிகள்

### புதிய பட்டினசபையின் எல்லைகள் நியமனம்

பலாங்கொடை நகரைப் பட்டின சபையாக அமைக்க விரும்புவதை முன்னிட்டு இந்நகர் 6 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்படும்.

இத் தொகுதிகளின் எல்லைகள் சென்ற வெள்ளிக்கிழமை இரவு வந்த கசெற்றில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

சம்பந்தப்பட்ட தேர்தல் பிரிவுகள் பின்வருமாறு:—

கொரக்ஹாமட, கொத்துகாதெல்லை, பலகஹமுல்லை, கடைத்தெருப்பகுதி, தும்பகொடை, கிகிண்டிகலை.

## தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலை

### ஸ்தாபகர் ஞாபகதினம்

இத்தினம் மேற்படி வித்தியாசாலையில் இக்தமாசம் 10-ம் திகதி (24-6-42) புதன்கிழமை கொண்டாடப்படும். வேறு நிகழ்ச்சிகளோடு முற்பகல் வழக்கறிஞர் திரு. க. இ. தம்பி அவர்களால் ஒரு சொற்பொழிவும் மாலை 7 மணிதொடக்கம் லேடி இராமநாதன் அவர்களின் தலைமையின்கீழ் கோலாலம்பூர் சங்கீத சபையைச் சேர்ந்த சங்கீத பூஷணம் செல்வி பாஞ்சோதி அம்பாள் அவர்களால் பக்கவாத்திய சகிதமாய் ஒரு சிறந்த கதாப்பிரசங்கமும் நடைபெறும்.

—கடிதம்

## தோட்டமுதலாளியை உலக்கையால் தாக்கியவர்

### குற்றவாளியாகக் காணப்பட்டார்

பதுளை, ஜூன், 18௨

சென்ற ஏப்ரல் மாதம் 13-ந் திகதி பத்தவத்தை தோட்டத்தைச் சேர்ந்த புஞ்சி ஹீவா கேமாட்டின் சிங்கோ என்பவர் மதுல்சிமாவிலுள்ள வெல்லப் பதனை தோட்டத்தைச் சேர்ந்த உதவிச் சுபரிண்டெண்ட் மிஸ்டர். ஏ. வி. ஏர்லத்தை உலக்கையால் தாக்கிக் காயமிழைத்ததாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு வதுளைப்பொலிஸ் நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி தனது கையில் ஒரு தடி தாங்கியவராய் மிஸ்டர். ஏர்லத்தின் சாரதியைத் துரத்திச்சென்றபொழுது அத்தடியை வீசியபடி மிஸ்டர். ஏர்லத்து கூறவே எதிரி குற்றத்த உதவிச் சுப்பிரிண்டெண்டைத் தாக்கியதாகச் சொல்லப்படுகிறது.

உலக்கையால் தாக்கப்பட்ட பொழுது மிஸ்டர். ஏர்லத்து தமது கையால் தடுக்க முயன்றபோது, வலது கைவிரலொன்றிற் சொற்பகாயமும் இடதுகைப் பெருவிரலில் மற்றொருகாயமும் வலது காதில் ஒருகாயமும் ஏற்பட்டிருந்ததாக வைத்திய சாட்சியத்தில் கூறப்பட்டது.

விசாரணை இன்று முடிவுற்றது. அதிகோர விசாரணையின்பின் எதிரி குற்றவாளியென்று காணப்பட்டார். எதிரியை அடையாளங் கண்டுபிடிப்பதாக அவருடைய விரலடையாளத்தைப் பதிவுசெய்யும்படி நீதிபதி உத்தரவிட்டுத் தீர்ப்புக்கூறுவதை அடுத்த திங்கட்கிழமைவரை பின்போட்டு வைத்தார்.

## சீனி வாங்குவதிற் சிறு வியாபாரிகளின் கஷ்டம

### மொத்த வியாபாரிகளின் காலதாமதம்

இப்பொழுது கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் சீனியிலையை உயர்த்த மொத்த வியாபாரிகள் முயலுவதாக அதிகாரிகள் சந்தேகிக்கிறார்கள். வெளிமாகாணங்களிலிருந்து "அநுமதிச்சீட்டுகளுடன் சில்லறை வியாபாரிகளுக்குக கொழும்பில் மொத்த வியாபாரிகளிடமிருந்து சீனி பெறுவதில் வீண் காலதாமதம் ஆகிறதென்றும் அதனால் சிலர் சீனி இல்லாமலே திரும்ப நேரிட்டிருக்கிறதென்றும் அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சீனிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி மொத்தவியாபாரிகள் சீனியைச் சில்லறை வியாபாரிகளுக்கு விற்க மறுப்பது குற்றமாகையால் சில்லறை வியாபாரிகளுக்குச் சீனி கிடைப்பதிற் கஷ்டங்கள் ஏற்படுத்தவே அவர்களால் இம்முறைகள் கையாளப்படுகின்றன.

சீனிக்கட்டுப்பாட்டுத் திட்டம் ஒழுங்காக நடப்பதற்குத் தடையாகவிருக்கும் இக் கஷ்டங்களைப் போக்குவதற்காகப் புறக்கோட்டையில் நடைபெறும் சீனி வியாபாரத்தைக்கவனிக்க ஒன்று அல்லது இரண்டு அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகிறது.

அநுமதிச்சீட்டுக்களுடன் வரும் சில்லறை வியாபாரிகளுக்கு அவர்களுக்குத் தேவையான சீனி கிடைப்பதில் வீண்காலதாமதம் ஏற்படாமற் பார்த்துக்கொள்வதும் இவ்வதிகாரிகளின் பொறுப்பாகவிருக்கவேண்டுமென்று கூறப்படுகிறது.

## ரூபா. 20 இனும்

நாரந்தனையைச் சேர்ந்த நாகலிங்கம் கந்தையா என்னும் வாலிபனைச் சென்ற ஞாயிற்றுக்கிழமை 14. 6. 42 தொடக்கம் காணவில்லை. அவரின் வயது 16, நிறம் கருமை, உயரம் 4½ அடி வரையில் இருக்கும். அவ்வாலிபனைப் பிடித்துத் தருபவருக்கு அல்லது அவர் இருக்குமிடத்தைத் தெரிவித்துப் பிடிக்கத் துணை செய்பவருக்கு ரூபா. 20. இனும் கொடுக்கப்படும்.

மு. மயில்வாகனம்
ஆசிரியர் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்

Mis 61 18—22. 6. 42.

## துறைமுகத்தில் திருடுவோர்

### புகைரதத்தி நட்டுகளுக்குக் கசையடித் தண்டனை

இலங்கையிலுள்ள துறைமுகப் பகுதி எதிலும் களவு செய்பவர்களுக்கு அவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனையோடுகூடக் கசையடியும் கொடுக்கப்படும். இலங்கைப் புகைரதத்தில் களவு செய்பவர்களுக்கும் இவ்விதமே தண்டனையளிக்கப்படும். துறைமுகத்திலிருந்தோ அல்லது புகைரதத்திலிருந்தோ களவாடப்பட்டதென்று சந்தேகிக்கப்படும் பொருள்களை வைத்திருப்பவர்கள் சட்டரீதியாக அப்பொருள்கள் தமக்குக் கிடைத்த விதத்தை நிரூபிக்காவிட்டால், அவர்களுக்குக் கசையடித்தண்டனை அளிக்கப்படும்.

சென்ற புதன்கிழமை வெளியான கசெற்மூலம் இத்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தன. இதனால், இம்மாதிரியான திருட்டுக்களில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சிறிதும் சந்தேகமேற்படும்படி பொதுமக்கள் நடந்துகொள்ளக் கூடாது.

## விவாகம்

சச்சிதானந்த — லிங்காம்பிகை

நிகழும் 1942-ம் ஆண்டு ஜூன் மீ 28-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 11½ மணிக்கும் 1 மணிக்குமிடையேயுள்ள சுபமுகூர்த்தத்தில் பம்பலப்பிட்டி 17-ம் லேன் A யிலுள்ள "சாந்தம்" என்னும் இல்லத்தில் திருவளர் செல்வன் குமாரசுவாமி சச்சிதானந்தா அவர்களுக்கும் திருவளர் செல்வி சுந்தரலிங்கம் லிங்காம்பிகைக்கும் விவாகம் சைவமுறைப்படி நடைபெறும்.

மணமகன் தமது இல்லமாகிய பம்பலப்பிட்டி காலிவ் லேன், 23-ம் நம்பர் இல்லத்தைவிட்டுக் காலை 11 மணிக்குப் புறப்படுவார்.

மணமகளும் மணமகனும் அவர்கள் பெற்றோரும் தங்கள் சுற்றமித்திரர்களை அன்போடும் வரவழைக்கின்றனர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. சுளிபுரம் தம்பையா கனகசபை,
2. " தம்பையா-சுப்பையா.

தனக்காகவும் காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை. தம்பையா பெண் அமுதத்தின் ஆதனங்களுக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 990ம் இலக்க வழக்கில் தத்துவ காரனாகவும்

வழக்காளி

இல. 1686ᵃ.

எதிராக

சக்கானையிலிருந்து போய்த் தற்போது பூநகரியில் இருக்கும் மூத்ததம்பி கைம்பெண் ஆதிநாயகம் தனக்காகவும் காலஞ் சென்ற மூத்ததம்பியின் ஆதனத்துக்குப் பிரதிநிதியாயும் (Legal Representative) எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 16865 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகள் 1942 ம் ஆண்டு ஆடி மீ 11௨ சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா. 3600 க்கும் இதற்கு 11. 9. 41 திகதி தொடக்கம் 100 க்கு 9 வீதவட்டியும்.

காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானை கோயிற்பற்று சங்கானை இறை, நவடியொல்லை பர. கில இலா. பன்னிரண்டு குளி பதினெண்மோமக்கால் வீடும் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு மேற்சொல்லிய எதிரிகளுக்கும் மறுபேருக்கு முரிய காணி, வடக்கு அம்பலவாணர் முத்துக்குமாருவுக்கும் மறுபேருக்கு முரியகாணிகள், மேற்கு மூத்ததம்பி சின்னப்புவுக்குரிய காணி, தெற்கு கையொழுங்கையும் அமெரிக்கன்மிஷன் பாடசாலைக்குரிய காணியும், இதில் குறித்த கிணற்றில் பிறபங்காளருக்குரிய பங்குகளும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் புறநீக்கலாக இதடங்கலும்.

2. ஷை சங்கானை இறை தேற்றுவடிபர. கி. இலா. எட்டு, வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பெண் சிவக்கொழுந்தினுரிமைக் காரருக்குரிய காணி, வடக்கு தாமோதரம்பிள்ளை கைம்பெண் தையல்நாயகிக்கும் மறுபேருக்கு முரிய காணி, மேற்கு அம்பலவாணர் முத்துக்குமாருவுக்கும் மறுபேருக்கு முரிய காணி, தெற்கு அப்பாப்பிள்ளை நடராசாவுக்கும் மறுபேருக்கு முரிய காணி, இதடங்கலும் வடக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கிற கிணற்றிலிதற்குரிய பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் வடக்கெல்லைக் காணியின் கிழக்குப் புறத்திலதன் வடக்கெல்லையிலிருக்கிற ஒழுங்கைக்குப் போக்குவரவு பண்ண வைத்துக்கொண்ட கையொழுங்கையும்.

R. SATGURU
கொம்மிஷனர்

சுளிபுரம் 1942 ஆம் ஆனி மீ 9௨

Mis 63 22. 6. 42.

## அகில இலங்கைச் சைவமகா நாடு

நிகழும் சித்திரபானு வருஷம் ஆனிமாசம் ௧௪-ந் தேதி (28-6-42) ஞாயிற்றுக்கிழமை "இ சி ம லை ஸ்ரீ வைத்தியலிங்கம்பிள்ளை மடத்தில்" திரு. ச. நடேசபிள்ளையவர்கள் தலைமையில் ஓர் அகில இலங்கைச் சைவமகாநாடு நடைபெறுமென மேற்படி மகாநாட்டுக் கௌரவகாரியதரிசி திரு. மு. மயில்வாகனம் அவர்கள் தெரிவிக்கின்றார்.

நிகழ்ச்சிகள்

முற்பகல்

8.30—9 கீரிமலைச் சிவன்கோவிலில் வழிபாடு
9 —9.30 வரவேற்புரை, நவாலியூர், திரு. க. சோமசுந்தரப் புலவர் அவர்கள்
9-30—10.15 தலைவர் முன்னுரை
10.15—11 சொற்பொழிவு 'திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்', ஏழாலை, திரு. ஐ. பொன்னையா அவர்கள்.
11—11.15 தமிழ்மறையோதல்.
11.15—12 சொற்பொழிவு 'சைவாசாரம்', கொக்குவில், திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள்.

பிற்பகல்

1-30—2.15 சொற்பொழிவு 'உமாபதி சிவம்'. வேலணை, திரு. செ. கனகசபாபதிப்பிள்ளை அவர்கள்.
2.15—2.30 தமிழ்மறையோதல்.
2.30—3.15 சொற்பொழிவு 'சித்தியாரும் உளநூலும்', தெல்லிப்பழை, திரு சி. முருகேசு அவர்கள்.
3.15—4 பரிசளிப்பு.
4—4.30 தலைவர் பூர்த்தியுரையும் நன்றி கூறலும்

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(396 மீ)

(† இசைத்தட்டு)

### செவ்வாய் ஜூன் 23

காலை 7-30 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 தந்தி இசை 7-40 பழகிய நால்கள்† 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 திரைகானம் † 8-20 டி. பாலம்மாள் வீணை பாட்டு 9.00 ஒலிபரப்பு முடிவு.

1-00 படபபாட்டுகள் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.35 எஸ். பாலகிருஷ்ணன் மகாதேவ வந்தருள் 2-00 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 டி. பாலம்மாள் வீணை பாட்டு 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 நடைமுதல் நிகழ்ச்சி(ஆங்கிலம்) 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6-35 தமிழில் செய்திகள் 6-45 குனந்தக்கூத்து 7-15 சாழும் யுத்தமும் 7-30 தோத்திரப்பாட்டு (இசைத்தட்டு) 7-45 மதராஸிலுள்ளபடி 9-15 சாக்சி (இசைத்தட்டு) 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 10.00 ஒலிபரப்பு முடிவு.

### புதன் ஜூன் 24

காலை 7-15 கீதாரம்பம் (இசைத்தட்டு)7-20 தமிழில் செய்திகள் 7-30 சிலையவித்வான் வயலின் 7-40 திரைகானம் (இசைத்தட்டு) 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 நாகஸ்வரம் 8-20 டி. முருகேசன் அடாணு 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 டாக்கி மெட்டுகள் (இசைத்தட்டு)1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 டி. முருகேசன் கல்யாணி 2-00 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 திருவாலங்காடு சுந்தரேசய்யர் வயலின் 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 நடைமுதல் நிகழ்ச்சி (ஆங்கிலம்) 6.15 கிராம நிகழ்ச்சிகள் 6-35 தமிழில் செய்திகள் 6-45 கானலோல வீணை பாட்டு 7.15 நடைமுதல் நிகழ்ச்சி 7-30 அறிவிப்புகள் 7-45 சென்னைத்தொழில்கள் 8.00 திருவாலங்காடு சுந்தரேச ஐயர் வயலின் 8-30 அமெரிக்க வாத்ய டேல்வி அஞ்சல் 8-45 திருச்செந்தூர் வேலன் நாடகம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

### வியாழன் ஜூன் 25

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வானொலி வாத்ய கோஷ்டி 7-40 சினிமா கீதம் (இசைத்தட்டு) 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 எம். ராஜகோபால சர்மா (இசைத்தட்டு) 8-20 என். தந்கமணி புல்லாங்குழல் 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 டாக்கி மெட்டுகள் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 என். தங்கமணி புல்லாங்குழல் 2-00 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 மதுரை அனந்த லக்ஷ்மி 5-45 இசைப்பயிற்சி 6 00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 நடைமுதல் நிகழ்ச்சி 6-35 தமிழில் செய்திகள் 6-45 மதுரை அனந்தலக்ஷ்மி 7-15 செய்திக் கதம் 7-30 அறிவிப்புகள் 7-45 செம்மை வைத்யநாத பாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

## சில்லறை நாணயத் தட்டுப்பாடு

### பொக்கிஷக் காரியாலய அதிகாரிகளின் ஆச்சரியம்

பத்துச்சத 5 சத ஒருசத நாணயங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதுபற்றிப் பொக்கிஷக்காரியாலயம் புலன்விசாரித்து வருகிறது. நிலைமையில் அபிவிருத்தி ஏற்படாவிட்டால் மாதக்கடைசியில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும் பொக்கிஷக் காரியாலயம் உத்தேசித்திருக்கிறது.

இந்த நாணயங்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டது பொக்கிஷக்காரியாலய அதிகாரிகளுக்குப் பேராச்சரியத்தை உண்டுபண்ணியிருக்கிறது. அண்மையில்தான் அரசாங்கம் இந்தியாவிலிருந்து இந்நாணயங்களை ஏராளமாக வரவழைத்துச் செலாவணியில் விட்டிருக்கிறது. மேலும், அதேசமயத்தில் செலாவணியிலிருந்த ஒருசத 5சத பத்துச் சத நாணயங்களை அரசாங்கத்தார் வாபஸ் பெறவுமில்லை.

இவ்வளவு அதிகமான நாணயங்கள் செலாவணியில் இராமலிருப்பதை நன்கு விசாரித்து இந்நாணயங்களை ஜனங்கள் சேமித்து வைத்திருந்தால் அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

முன்பு பத்துச்சதநோட்டுகள் வெளியிட்டதுபோல் அரசாங்கத்துக்கு ஐந்துசத நோட்டுகள் வெளியிட இப்போது உத்தேசமில்லை.

இதற்கிடையில் சில்லறை நாணயங்களின் தட்டுப்பாட்டினால் பொதுஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

## கோவில் அதிகாரிகட்கும் சைவப்பிரமுகர்கட்கும் ஓர் வேண்டுகோள்

அன்புடையீர்!

நிகழும் இம்மாதம் 3-ந் திகதி (17-6-42) புதன்கிழமை 'வேலணையைச் சேர்ந்த புளியங்கூடல் அம்பாள் கோவிலில் தேர்த் திருவிழா நடந்தேறியது. அவ்வமயம் ஓரடியார் தேர்ச்சில்லில் அகப்பட்டுக் காயமடைந்தமை காரணமாகக் கவலைக்கிடமான நிலைமையில் இருக்கின்றார். அவ்வடியார் தேவி அருளாலும் ஏனை அடியார்களின் ஆசீர்வாதத்தினாலும் பூரணசுகம் பெறுவார்.

ஆனால், இத்தகைய போபத்துகள், இடையிடையே பல திருக்கோவில்களில் நிகழ்ந்திருக்கின்றன. இருந்தும் அவ்வாபத்துகள் நிகழாதிருக்கும் வழிவகைகளை, கோவில் அதிகாரிகளும் சைவப் பிரமுகர்களும் முன்கூட்டியே கவனியாதிருத்தல் மிகவும் வருந்தத்தக்கதொன்றாகும்.

தேர்த் திருவிழாத் தினங்களில் மிகுந்த அன்பர்கள் தரிசிப்பதை அறிந்திருந்தும் சைவ நன்மக்கள் சாதாரண நிலைமை நிகழக்கூடியதாக நடப்பது இகழ்ச்சிக்கிடமாகுமன்றோ, எமதுநாட்டுக் கோவில்களினும் பார்க்க சனசமூகம் அதிகமாய்த் திரளுகின்ற நம் தாய்நாடாம் இந்தியாவிலுள்ள திருக்கோவில்களின் அதிகாரிகளும் அன்பர்களும் வெகு கவனமாகவும் சுலபமாகவும் திருவிழாக்களை நடாத்தி நாமும் இன்புற்று ஏனை அடியார்களையும் இன்புறச் செய்கின்றார்களே. அங்கெல்லாம் அடியார்கள் தேர்ச்சில்லில் இருந்து ஆறுமுழ தூரத்திற்கப்பால் நின்றுகொண்டே திருவடத்தை இழுக்கின்றார்கள். ஆனால் எங்கள் நாட்டுக் கோவில்களிலோவென்றால் நெருக்கமாகக் கூடிச் சில்லிற்குச் சமீபத்தில்நின்று திருவடத்தை இழுப்பதுமல்லாமல அத்திருவடத்தை நன்றாகப் பிடித்தும் இழுப்பதை நாம் கண்ணாரக் காணுகின்றோம். கண்டும் அதற்கேற்ற வழிவகைகளைக் கையாளாதிருத்தல் நம் பேதைமையன்றோ?

ஆகையால் அன்பர்களே!

சைவமக்களாகிய நாங்கள் எமது பிற்காலச் சந்ததியார், எல்லாம் வல்ல இறைவன் அருளில் நன்கு நிலைத்து நன்மையுற வாழ வேண்டுமாயின், சைவ நல்லறிவில்லாத எம் சகோதரர்கட்கு நம் சமய உண்மைகளைப் போதித்து அஞ்ஞானவிருளைப் போக்குவதோடு, இத்தகைய ஆபத்துகள் நிகழுமிடத்து ஆதிவிலா அடியார்கள் கடவுளுக்குப் "பலிபிடாக் குறை" யெனக் கூறும் மூடவாக்கியங்கட்கு இடங்கொடாது ஏற்ற நடவடிக்கைகளையும் நன்றாக ஆராய்ந்து கைக்கொள்வார்களாக. இதை வாசிக்கும் அன்பர்கள் வாசித்தல் மாத்திரத்தில் அமையாது இனிமேலாவது செவ்வையான நடைமுறையைப் பின்பற்றுவார்களென்றும், இது சம்பந்தமான நல்ல முறைகளைப் பிற அடியார்களுக்கு நன்கு போதிப்பார்களென்றும் எதிர் பார்க்கின்றேன்.

இங்ஙனம்,
ஓர் தரிசன அடியான்.

21-6-42.




மூல வியாதிக்கு கருணைக்கிழங்கு லேகியம்

மூல முளைகள் ரத்தம் சீழ பவுந்திரம் வாயவுகள சுகமாகும மலபநதம நீங்கும் 3 நாளில் சுகம் காணலாம கேடலாக இரை 12 நாள மருநது ரூ. 3 0.0

தண்டபாணி வைத்யசாலை
பெரியகடை வீதி, பழனி. (S. I.)

(Q. 59. 18.6-42—17-9-42) (த)

# இன்பந் தேடல்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

பின்பு மூவரும் குதிரைமீதேறிப் புறப்பட்டனர். அரண்மனை வாயிலைக் கழிந்தவுடன் வழியோரத்தில் பிச்சைக்காரி ஒருத்தியைக் கண்டார்கள். அவள் ஓர் செம்மைநிற ஆடையுடன் முகத்தை மறைக்கும் ஓர் தலையணியையும் அணிந்திருந்தாள். அரசகுமாரர் அவளைக் கண்டதும் தங்கினர். "நீ யார்?" என வினவினர்.

அதற்கு அவள் நாணத்துடன், "சிலர் என்னை மனநிறைவு என அழைப்பர். நான் மிகத் தாழ்வுடையேன்," என விடைபகர்ந்தாள்.

இவ்விடையைக் கேட்டதும் மூத்தவர் இருவரும் "இன்பத்தைத்தேடிக்காண வேண்டுமாயின் நாம் விரைந்து செல்லுதல் வேண்டும், இவளோடு நின்று வீண்காலம் போக்கக் கூடாது" என்று கூறிவிட்டுத் தம் வழியே போயினர்.

மூன்றாவது அரசகுமாரன் தன் தமையன்மார் போலன்றி அவ்விடத்தில் மேலும் தங்கினான். "அம்மா, நீ ஏன் இவ்வழியோரத்தில் இருக்கின்றாய்!" என அப்பெண்ணைக் கேட்டான்.

அதற்கு அவள், "நான் வெயிற் குளித்துக்கொண்டு சற்று இளைப்பாறுகிறேன்" எனப் பதில் கூறி விட்டு அரசகுமாரன் கையில்வைத்திருந்த பெட்டியைப் பார்த்து, "அதற்குள் இருப்பது யாது?" என வினவினள்.

"இதற்குள் அன்புப்பணிகள் என்னும் சிறுசிறு மூலிகைகள் உள்ளன, இவற்றை என் பாட்டியார் வைத்திருந்தார்" என்று கூறிவிட்டு அரசகுமாரன் ஒரு மூலிகையை எடுத்து அவளுக்குக் கொடுத்தான்.

பிச்சைக்காரியாகிய அப்பெண் அதற்கு நன்றி கூறியபின், "நீங்கள் எங்கே செல்கின்றீர்கள்?" என்று அரசகுமாரனைக்கேட்க அவன் "உலகில் நான் இன்பத்தைத் தேடிக்காணப் போகின்றேன். அவள் எங்கிருக்கின்றாள் என ஒருவேளை உனக்குத் தெரியும்போலும். அவள் இருப்பது நெடுந் தொலைவிலா?" என்றனன்.

பிச்சைக்காரி, "இல்லை, நீங்கள் நினைப்பதுபோல இன்பம் அத்துணை நெடுந் தொலைவில் இருக்கமாட்டாள். இவ்வழியிலேயே அவளைச் சந்திதாலும் சந்திக்கலாம்" என்று சொன்னாள்.

"நன்று, நான் போய்த் தேட வேண்டும். நான் போகும்வழியே நீயும் போகின்றபடியால் இதோ என் குதிரைமேல் ஏறி வருவாயாக. தனியே பிரயாணஞ் செய்தலினும் பார்க்க ஒருவரை வழித்துணையாகக் கூட்டிப்போதல் எனக்கு மகிழ்ச்சியைத் தருமல்லவா?"

அரசகுமாரன் கால்நடையாகவும் பிச்சைக்காரி குதிரைமேலேறிக் கொண்டும் வழிச் செல்வாராயினர். வழியில் நொண்டி ஒருவன் எதிர்ப்பட்டு அவர்களைக் கொஞ்சம் காசு தரும்படி இரந்தான்.

அரசகுமாரன் அவனுக்குக் காசு கொடுத்து, "இம்மூலிகளும் சில இதோ உனக்குத் தருகின்றேன். இவை துன்பம் நோய் முதலியனவற்றை நீக்கி உனக்கு மகிழ்வையளிக்கும்" என மொழிந்து தன் பெட்டியிலுள்ளிருந்த மூலிகளுட் சிலவற்றையுங் கொடுத்தான்.

அதன்பின் "நீ எங்கிருந்து வருகின்றாய்?" என்று அரசகுமாரன் கேட்க, நொண்டி, "நான் வாழ்க்கை நகரிலிருந்து வருகின்றேன்" என்று சொன்னான்.

"இன்பம் என்பாளொருத்தி அந்நகரில் இருக்கின்றனளா?" என அரசகுமாரன் வினவியதற்கு "அப்பெயருடையார் எவரைப்பற்றியவது நான் அங்கே கேள்வியுற்றேனில்லை" என நொண்டி விடை பிறந்தான்.

பின்னர் அரசகுமாரனும் பிச்சைக்காரியும் வழியில் இன்னும் பலரைச் சந்தித்தார்கள். தேவையுள்ளார்கட்கெல்லாம் அரசகுமாரன் காசும் மூலிகளும் வழங்கினான். அவர்கள் எல்லாரும் தாங்கள் வாழ்க்கை நகரிலிருந்து வருகின்றோமென்றும் அங்கே நோயுந் துன்பமுமே மிகுதியாயுள்ளன வென்றும் இன்பம் என்னும் பெயருடையார் எவரையும்பற்றித் தங்கட்குத் தெரியாதென்றும் கூறினர்.

"அவ்வாழ்க்கை நகரத்திற்கே நான் போவேன்," என்று இவற்றைக் கேட்ட அரசகுமாரன் ஆர்வத்தோடு கூறினான். "போய் அங்குள்ளார்க்கு இவ்வியப்பான மூலிகைகளைக் கொடுப்பேன். நோய் தணிதற்கும் துன்பம் நீக்குதற்கும் நன்மருந்து இவையன்றோ! அதன் பிறகே, என் தமையன்மார் தேடிக்கண்டில ராகிய, ஒருவேளை இன்பம் என்பாளைத் தேடி நான் போவேன்."

* * *

பலவாண்டுகள் கழிந்த பின் ஓர் நாள் மிக மூத்தவனான அரசிளங் குமாரன் தன் தந்தையின் அரண்மனைக்குத் திரும்பிவந்தான். அவன் அழகிய மங்கையொருத்தியுடன், ஆறு குதிரைகள் பூட்டிய பொற்றேர் ஒன்றில் ஏறி வந்தான்.

வந்தவன் அரசனை நோக்கிப் பின்வருமாறு கூறினான்; "எந்தையே, நான் வியத்தகு கோட்டை ஒன்று கட்டி அதைப் பட்டினாலும் பொன்னினாலும் நவமணிகளாலும் அலங்கரித்தேன். அக்கோட்டையில் பெரிய விருந்துகளும் விழாக்களுங் கொண்டாடினேன். அவற்றிற்கு நாட்டின் பல பாகங்களிலுமுள்ள மங்கையர்களை வரவழைத்தேன். ஆயினும் இன்பம் எனப்படுவாள் எவளும் அவ்விருந்து விழாக்களுக்கு வந்தாளில்லை. சிற்றின்பம் என்னும் இவ்வழகிய மங்கையே அடிக்கடி வந்தாள். இவளையே நான் என் வாழ்க்கைத் துணையாகவும் நாட்டிற்கு அரசியாகவும் வைத்திருக்க விரும்பி இங்குக் கொண்டு வந்தேன்."

சிற்றின்பம் காட்சிக்கு இனியவள். வானவில்லின் நிறங்களோடு கூடிய அழகிய ஆடை அணிந்திருந்தாள். அவள் சிரித்தால் அவளுடைய சிரிப்பானது அரண்மனையின் மூலை முடுக்கெல்லாம் கேட்கும்.

ஆண்டிலன்றி அறிவிலும் முதிர்ந்தவனான அரசன் அவளைப்பார்த்துவிட்டுத் தன்மகனை நோக்கி, "மகனே, இவள் இன்பம் அல்லள். காலப்போக்கில் இவள்பால் உனக்கு உவர்ப்பு ஏற்பட்டுவிடும்" என்று கூறினான். பிறகு தன் மற்றைப் புதல்வர்களின் வரவை எதிர்பார்த்திருந்தான்.

சிறிது காலத்தில் இரண்டாவது மகனும் திரும்பி வந்தான். அவன் ஒளிமிக்க பெரிய எஃகுத் தேரொன்றில், பெருமிதத் தோற்றத்தோடுங் கூடிய அழகிய மங்கையொருத்தி பக்கத்தில் வீற்றிருப்ப, ஏறி வந்தான்.

அவன் அரசனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்; "எந்தையே, நான் பெரிய பண்டகசாலைகளும் 'மில்'களும் அமைத்தேன். நாட்டிலுள்ள தானியங்களெல்லாம் வாங்கித் தொகுத்தேன். என்னுடைய கப்பல்களெல்லாம் வாணிகத்தின் பொருட்டுத் திரைகடலில் காற்றையும் ஓடுகின்றன. எல்லா நாடுகளிலும் பற்பலர் என் பொருட்டு வேலை செய்து என் ஆணையைத் தாங்கி நிற்கின்றார்கள். இன்பம் என்பாளை நான் கண்டேனில்லை. ஆயினும் வெற்றி என்னும் இம்மங்கை கல்லாரன் எனக்கு வாய்த்தாள். இவளையே என் மனைவியாகவும் நாட்டிற்கு அரசியாகவும் வைத்திருக்க விரும்பி என்னுடன் கொண்டுவந்தேன்."

வெற்றி பலநிறப் பட்டுடுத்துப் பொன்னணிகள் பூண்டிருந்தாள்; உயரமும் கருநிறமும் வாய்ந்த அழகின் மிக்கு விளங்கினள். அவளின் முகம் ஈரமற்றதாய் பெருமிதத்தோடு கூடியிருந்தது. அவள் சிரித்தலோ புன்னகை புரிதலோ சற்றும் இல்லை.

வெற்றியைக் கண்டதும் அரசன் முகம் கவிழ்ந்த வண்ணமாயிருந்து, "இவள் அரசியாதற்குரிய தகுதி உடையாளல்லள். இறுமாப்பு மிக்குடையாள், என் குடிகளைத் தன் வெப்பம் பொருந்திய பார்வையினாலேயே எரித்து விடுவாள்" என்றான்.

இவ்வாறு தன் புதல்வர் மூவரில் இருவரும் இன்பத்தைத் தேடிக் காண மாட்டாது திரும்பி வந்ததைக் கண்ட அரசன் கவலை பெரிதடையனாகி மூன்றாவது மகனும் இப்படியேதான் அவளைக் காண முடியாது திரும்புவானோ என்று துயரத்தோடு எண்ணிக்கொண்டிருந்தான்.

* * *

மூன்றாம் புதல்வன் திரும்பி வர இன்னும் பல வாண்டுகள் சென்றன. வந்தபோது அவன் தான் ஏறுதற்குத் தேரொன்றுமின்றி, ஓர் குதிரைதானுமின்றி, காலினால் நடந்தே வந்தான். முன்பு கண்ட அந்தப் பிச்சைக்காரி ஓர் கிழக்கழுதையின் மீது ஏறிவர அவளையுந் தன்னுடன் கூடவே அழைத்து வந்தான்.

வந்தவன் பின்வருமாறு அரசனை நோக்கிச் சொன்னான். "என் அருமைத் தந்தையே, நான் இத்துணை நெடுங்காலம் திரும்பிவராமலிருந்த குற்றத்தைப் பொறுத்தருள்வீராக. என் பாட்டியார் விட்டுப் போன அந்த அரிய மூலிகளை வாழ்க்கை நகரில் தேவையுற்றோர்க்கெல்லாம் கொடுப்பதிலேயே இத்துணைக் காலமுங் கழிந்தது. உண்மையாகவே, இன்பம் என்பாளைத் தேட எனக்கு நேரமே இல்லாது போய்விட்டது."

தாழ்வுடன் நின்ற பிச்சைக்காரியைச் சுட்டிக்காட்டி அரசன் "இவ்வினையாள் யார்?" என மகனைக் கேட்டான்.

"எந்தாய், இவள்தான் மனநிறைவு என்றழைக்கப்படுவாள். என் பிரயாணத் தொடக்கம் முதல் இவள் என்னுடன் கூடவே வந்தாள். இவளையே என் வாழ்க்கைத்துணையாக வரித்துக் கொள்வேன்."

அரசகுமாரன் கூறிய இச்சொற்களைக் கேட்டதும் அரசவையிலிருந்தார் யாவரும் ஆச்சரியமடைந்தனர். சிற்றின்பம் அப்போது சிரித்த சிரிப்பு அரண்மனை யெங்குங் கேட்டது. வெற்றி தன் ஆடையை இழுத்துத் தன்னை மூடிக்கொண்டு பேரிகழ்ச்சிக் குறிப்போடு பிச்சைக்காரியை உற்று நோக்கினள்.

இந்நிலையில் அப்பிச்சைக்காரி முன்னைத் தன் தலையை மறைத்திருந்த தலையணியையும் தான்போர்த்திருந்த வெளியாடையையுங் கழற்றியெறிந்து விட்டு உள் மறைந்திருந்த தூய வெள்ளாடையோடு அரசவையில் நின்றாள். அவளின் அழகு கண்கொள்ளாக் காட்சியாய் விளங்கியது. அவையிலுள்ளார் எல்லாரும் வாயடங்கிப் பெருவியப்பு மீதூர அவளை இமை கொட்டாமல் பார்த்த வண்ணமாயே இருந்தனர்.

"என்னை, இன்பம் தேடினேன்!" என அரசன் உரத்துக் கூவினான்.

"ஆம், காணே," என அப்பெண்மணி விடையளித்தாள்.

மூன்றாவது அரசகுமாரன் அவளடிகளில் தாழ்ந்து நின்று, "என் அன்பே, நீதானோ என்னை விட்டு நீங்காது இத்துணைக் காலமும் என்னுடன் கூட இருந்தாய்!" என்று கூறி ஆரந்த பரவசமானான்.

தமையனர் இருவர்க்கும் ஒன்றும் புலப்படவில்லை. "உன்னைத் தம்பி எங்கே கண்டான்?" என்று இன்பத்தைக் கேட்டார்கள். "நாங்களும் அவனைப்போலன்றோ உன்னை எத்துணை வருத்தப்பட்டுத் தேடினோம்."

"நீங்கள் பிரயாணத்திற்குப் புறப்பட்டபோது நான் இவ்வரண்மனை வாயிலிலேயே இருந்தேன்." என்று இன்பம் பதிலளித்தாள்.

[இவ்வுருவகக் கதை இன்பத்தைப் பற்றிய சில உண்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வாசகர்கள் அவ்வுண்மைகளை உய்த்துணர்ந்து கொள்வார்களாக]

# தூய்மை

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

இங்குக் கூறியவையே யன்றி மாநிரம் செபங்களும் நிய இச்சைகள் கெட்டொழிதற்குத் துணைபாகும். இச்சாதனைகளை ஒன்றையே நீவும் பலவும் மிடைவி டின்றிப் பயின்றவரின், இளைப்புத் தோன்றிச் சாதனையில் வருவருப்புத் தோன்றல் கூடும். ஆதலின் சாதகர்தம் நிலைக்கும் அபாவத்துக்கும் ஏற்ற சாதனைகளைத் தெரிந்தெடுத்துக் கொண்டு ஒவ்வோர் சாதனையையும் தக்க அளவுக்கே பயிலல் வேண்டும். இச்சாதனைகளுள் ஆத்மநிவேதனம், அதாவது ஆத்ம சமர்ப்பணம், இறைவன் தாளை நிலைக்கொண்டு கொண்ட ஆவதாத்தில், தன்னிலொரு பகுதியும் புறநீக்கவில்லாமல், இறைவனுக்கே ஒப்பித்துவிடும் நிலையாதலால், தூய்மையை அதி சீக்கிரத்தி லுதவும் உத்தம சாதனையாகும். இறைவனேயன்றி வேறொரு பொருணையேனும் அறிவு வியாபரியாத இந்நிலையில் நிய இச்சைகளோடு கூடிய பிராரப்புக் கிட நில்லையென்க.

சாதனைகளெல்லாவற்றுள்ளும் அதியுத்தம சாதனையாகக் கொண்டாடத்தக்க பெருமையையுடையது சற்சனர் சகவாசம். "தகை தூய்மை செய்வினை தூய்மை யிரண்டும்—இனந்தூய்மை தூவாவரும்" என்றார் நாயனார். ஆண்டியார்க்குப் பக்தி செய்து அவராணைவழி நிற்கு மவதாரத்தில் மசிந்தையெல்லாம் அவர் சொல்லிலும் செயலிலுமே செல்லும்; அவரையே சிந்தித்துத் துதித்து வழிபடுவோம்.

நியானபாவனை எல்லா மவரையே விடயமாகக் கொண்டு செல்லுதலால், சிந்தைசொற் செயலெல்லாம் சிவன்பாலன்றிப் பிறபொருண் மேற் செல்லாமையாற் கரணங்கள் தெளிந்து புனிதமாகிச் சிவமாந் தன்மையைப் பெற்ற இவரது பரிசுத்தநிலை யெமக்கும் கைகூடுதல் திண்ணம். எங்கும் எக்காலமும் சிவத்தையே கண்டுவாழு மிவர் எமமையுந் தம் பாவனையாற் புனிதராக்கி விடுவர். திரு நோக்குப் பரிசங்களாலு மிவர் தம்மை யடைந்தோரைப் புனிதராக்குவர். சித்தந் தெளிந்து சிவமான இவர் சிவபரம் பொருளின் அருட்கொழிற் கெல்லாமுரியராய்த் தம்மையடைந்தோர்க்கு பர சுகமெல்லா முதவுவர். ஆதலினவரோ டிணங்கி யவர்சொற் கேட்டு மவ ரேவியன செய்தும் வாழ்தலே ய அறிவுடை மக்கள் நற்கதியடையும் நெறியெனப் போறுவர்.

"சித்தம் தெளிந்து சிவமானோ
ரெல்லார்க்கும்
கொத்தடிமை யான குடிநான்
பராபரமே" என்றும்
"அன்பர்பணி செய்யவெனை
யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்
தெய்தும் பராபரமே"
என்றும் தாயுமானுர் அருளியனவு சிந்திக்கற்பாலன.

ஆண்டியார் திருவடி வாழ்க!

—சிவதொண்டன்.

# அப்பய்யதீக்ஷிதர் வரலாறு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டீலன். அரசனது அவையில் அமரர்களையப் பூரணமாகக் காட்டினவர் தாங்களன்றோ! மேலும் காமாட்சியின் அருளைப் பெற்ற என்னை நாடியந்தையும் காணதியாதன்று. ஆகையால் தெய்வசித்தமே எமது சம்மதம் என்றார்.

உடனே அவ்விருவரும் ஒரு சுபமுகூர்த்தத்தை நிச்சயித்தார்கள். முறைப்படி அப்பய்ய தீட்சிதரவர்களுக்கும் மங்களாயவேமையாருக்கும் விவாகம் நிறைவேறியது. சிறப்பாக நடைபெற்ற விவாகத்தில் ஸ்ரீநிவாசதீட்சிதர் வாஞ்சிய அப்பய்ய தீட்சிதரவர்களைப் பூசிதலுக் கன்னிகாதானஞ் செய்ததும, மாமஹாராஜ அத்தேவிபக்த சிகாமணியாய அப்பய்யதீட்சிதரவர்களும்மங்களித ராகள். அப்பெரியாரும் தம் பதிகளை ஆசிர்வதித்தார்கள்.

## ஸ்ரீநிவாச தீட்சிதர் இயற்றிய நூல்கள்

இப்பெரியார் இயற்றிய வடமொழிநூல்கள் அனந்தம். அவற்றுள் தெரிந்த சில பின்வருமாறு:- சிந்நகண்ட விஜயகாவ்யம், பாபங்க புருஷோத்தமநாடகம், அத்வைததாஸ்ய கௌஸ்துபம், வாத தாராவளி, பத்வத்வம்சனம், பௌத தந்தநாசனம், வேதாந்தயாதாவளி, மணிதர்ப்பணம், சயசர்வஸ்வம், ஸ்திநிர்ணயம, இரத்னதீபம் என்பன.

## அப்பய்ய தீட்சிதரவர்களின் புகழ் பரவுதல்

இவ்வாறு தீட்சிதரவர்கள் மங்கள நாயகியம்மையாரை மணந்து கொண்டு இல்லறத்தை இனிது நடத்தினார்கள். சகலசாஸ்திரங்களையும் சீடர்களுக்குப் போதித்தல் வருணாச்சிரம தருமங்களை அதிபயபூர்வமாகத் தாம் அநுட்டித்துக் காட்டி ஏனையோரையும் அவ்வாறு ஒழுகச் செய்தல், வேதாகம சாஸ்திர நுட்பங்களைத் தெளிவுபடுத்தி நூல்களை இயற்றுதல் என்பன இவரது பொழுதுபோக்குக் கருமங்களாயின. அக்காலத்தில் இவருக்குப் பெருளுபகரித்து ஆதரித்தவர்கள் தஞ்சை நரசிம்மராஜாவும், வேலூர் சின்னபொம்மராஜாவும் ஆவர்.

இவர் அநுட்டித்த நித்திய கர்மானுட்டானம், பாடம்போதித்தல், நூலியற்றுதல், சிவவழிபாடு, பரோபகாரம், சிவ விஷ்ணுக்களிடம் பேதம் பாராட்டாமை ஆகிய நற்குணங்களால் பரவிய புகழ் இமய முதல் சேதுவரை விளங்கலாயிற்று. வடதேசப் புலவரான சர்வபௌமகவி என்பவர் இவரைக் கேள்வியுற்று ஒரு காலத்தில் தக்கிணம் நோக்கி வந்து அப்பய்ய தீட்சிதரவர்களை யடைந்தார்கள். புலவர் தீட்சிதரைப் பார்த்து தாங்கள் எந்த சாஸ்திரத்தில் வல்லவர் என வினவினர். அதற்கு விடையாக "வேதமும் அறியேன், சாஸ்திரமும் அறியேன். ஆனால் பாலசந்திரனைச் சடைமுடியில் சூடிய பரமேசுவரனிடம் பக்தி செலுத்துதல் ஒன்றையே நியதியாகக் கொண்டவன்" என்ற கருத்தமைய ஒரு செய்யுளைக் கூறினர். அதனால், "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன், நற்றாள் தொழாஅரெனின்" என்ற திருக்குறளின் பொருள் சுட்டப்படுவதாயிற்று. (தொடரும்)

## பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசபை எல்லை ●

| | | | |
|---|---|---|---|
| தமிழ் ரூபா 5.00 | இங்கிலீஷ் தமிழும் | 9 | 0 |
| இலங்கை இந்தியா 8.00 | இங்கிலீஷ் தமிழும் | 12.00 | |
| தொலைப் பகுதி 9.00 | இங்கிலீஷ் தமிழும் | 13.0 | |

தனிப்பிரதி சதம் 5

முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்

# பக்தி

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

தெய்வநாமமே முதற் கருவி. முடிவான கருவியும் அதுவே. வேறு கருவிகள் வேண்டாம் எனவுந் தோன்றுகிறது.

நாமரூபமற்ற கடவுளுக்குப் பல ரூபங்களுண்டு. எந்த உருவத்திலும் வருவான், நினைத்த வண்ணம் காட்சி கொடுப்பான். அவனுடைய நாமங்களும் பல. "பேராயிரம் பரவி வானோரேத்தும் பெம்மானை" என்றார் அப்பர் சுவாமிகள். அவன் மனத்தைக் கவரும் தெய்வநாமம் ஒருவனுக்குச் சிறந்தது. இது பொதுவிதி. அவனவன் சமயத்திற்குத் தக்கவாறும், குலவொழுக்கத்துக்குத் தக்கவாறும், பெரியவர்கள் உபதேசங்களுக்குத் தக்கவாறும் வாழ்நாளிலையும். ஆனாலும் ஆசாரவாயிலாகவும் அநுபவ ஒழுக்க வழக்க வாயிலாகவும் சிலமுறை மந்திரங்கள் தென்னாட்டில் வழங்கப்பட்டு வருகின்றன. சிவ, முருக, ஷண்முக, ராம, கிருஷ்ண, நாராயண ஆகியனவைகளே. யாவரும் இவைகளைச் சொல்லலமெனத் தோன்றுகிறது. நாள், கிழமை, நேரம், வேளை பார்க்க வேண்டாம். நடக்கும்போதும் சொல்லிக் கொண்டு போகலாம். வேலை யெல்லாம் முடித்துப் படுத்தவுடன் உறக்கம் வருமளவு சொல்லலாம். வீண்வார்த்தைகள் சொல்லிக் கொண்டு காலத்தைப் போக்காமல் ஒழிந்த சமயங்களில் சொல்லிப் படிக்கலாம். ஆரம்பத்தில் நியமமே கிடையாது; வேண்டியதுமில்லை. சொல்ல நிச்சயிக்க வேண்டும். தினமும் சொல்ல வேண்டும். சொல்ல ஆரம்பித்த நாமத்தை அடிக்கடி மாற்றிக் கொண்டு வேறொன்றை பிடித்தல் கூடாது. சொலலவோ நினைக்கவோ மறக்கக் கூடாது. சாக்கிய நாயனார் உபவாசம் பூண்டு சமண ஆசாரிக்குள் ஒரு நாளிலிருந்து சென்று வெளியிலிருந்து கல் எறிந்து வந்தாரல்லவா? ஒருநாள் மறந்துண்ண அமர்ந்தார்- வீர் என்று ஞாபகம் வந்தது. உடனே எழுந்தார்; கோயிலுக்கு ஓடினார்; மாறாதேனே என்று வருந்தினார்; தன் வழக்கமான பூஜையை முடித்தார். என்ன அடைந்தார்? சிவதரிசனமும் முத்தியும். மறவாமல் நாமத்தைச் சொல்லி வந்தாலே போதும். இன்னொரு விஷயம் கவனிக்கற்பாலது. நாமவிசேடத்தால் யாவும் கிட்டுமென்கிற உறுதியான நம்பிக்கை மனத்தில் ஊன்ற வேண்டும்.

அனுவசியமாய் மின்சச்சரவுகளிலும் வாதங்களிலும் நுழையும் வழக்கத்தை விடவேண்டும். அவனருளன்றி எதைச் செய்ய முடியும். நான் அதைச் செய்து விட்டேன்; இதைச் செய்யப் போகிறேன்; அது என்னால் செய்து முடிக்கப்படும் என்கிற எண்ணங்களில் வாழ்நாளில் ஞாண்டியாக முதிரும்படி விடுதல் தவறு என்று தோன்றுகிறது. அவனை மறவாமலும் அவனையே நம்பியும் தமது கடமைகளையும், வேலைகளையும் செய்து வருவதே ஈசனுக்கு எளிதில் செய்யக்கூடிய பூஜையாகும். அவனை மறந்தோர் தங்களை இழந்தவர்களாவர்கள். ஆதமாவுக்கு அழிவில்லையென்று சொல்வதுண்டு. அது அவனை மறந்துவிடுமாயின் அது இறந்து போனதாகச் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. நாமனைவரும் தெய்வ நாமத்தைச் சொல்ல எத் தனிகத் தடைகளுமுலவே!

இன்னொரு சிறு விஷயத்தோடு கட்டுரை முடியும். பலன்களை உத்தேசித்துக் கடவுள் நாமத்தைச் சொல்லி வருவதைக் காட்டிலும் பலன்களை லக்ஷியமாகக் கொள்ளாமல் யாவும் கிடைக்குமென்ற ஆற்றலோடு நாமத்தைச் சொல்லி வருதல் சிறப்பாம். ஒரு வேடிக்கையான கதை ஞாபகத்திற்கு வருகிறது. கதை மெய்யோ உண்மைதான. சந்தேகமில்லை: ஒரு நாள் ஜகதீசன் நேரங்கழித்து வந்தார். "ஏன் இவ்வளவு நேரம்" என்று பார்வதி தன்பதியைக் கேட்டாள். 'என் குழந்தைகளாகிய ஜீவகோடிகளுக்கு அன்னமிட்டு வந்தேன்; நேரமாய் விட்டது' என்றார் உமாபதி. "அப்படியா நானுக்கு இதைப் பொய்யாக்கி விடுகிறேன். வீணான மார் சொல்கிறீர்கள்" என்று உமை கேலியாய்ப் பதில் சொன்னாள். மறுநாள் வறண்டு உலர்ந்து ஒன்றுமில்லாத தேங்காய்க் குடுக்கைக்குள் ஒரு எறும்பை இட்டுத் துவாரத்தை நன்றாய் மூடிவிட்டுத் தன் ஆடைக்குள் மிகவும் பத்திரமாய் வைத்துக் கொண்டாள். மறுநாள் ஜகதீசன் வழக்கம் போல சரியாக வந்து சேர்ந்தார். "ஏது இன்று நேரமாகவில்லை; குழந்தைகளுக்கெல்லாம் உணவு அளித்தாயிற்றோ" என்றுள் அம்பாள். "ஆம்" என்ற பதிலைக் கேட்டவுடன் தன் புடைவைக்குள் மறைத்து வைத்த குடுக்கையை எடுத்து இதிலுள்ள எறும்பிற்குமா உணவிட்டாய் விட்டது" என்று சொல்லிக் கொண்டே அடைத்த துவாரத்தைத் திறக்கவே, என்ன ஆச்சரியம்! தம்பைப் பூ போன்ற ஒரு சொய்யரிசியைக் கௌவிக் கொண்டு எறும்பு வெளிவருவதைப் பார்த்தவளைக் கண்டாள். வெட்கி அகமகிழ்ந்து நாதனருகில் லாசமாய் உட்கார்ந்து மன்னிப்புக் கேட்டாளாம். இது தான் கதை. கல்லினுள் தேரைக்கும் உணவு அளிக்கும் ஈசன் பக்தனை என்றும் வருந்த விடார். அவனுக்குரியதை அளித்தே தீருவார். கவலை வேண்டாம். வேண்டியவைகள் கிடைத்தே தீரும். உறுதியான நம்பிக்கையும் திட சித்தமுக்காரன் அவசியம். பலன்களை உத்தேசித்துத் தான் தெய்வ நாமத்தைச் சொல்லிவர வேண்டுமென்ற கட்டாய விருப்பமேன் உணவு வேண்டும்; ஆடை வேண்டும்; இருக்க வீடு வேண்டும்; பொருள் வேண்டும்; இவை போன்றவைகளெல்லாம் வேண்டும் என்று கேட்பதோடு அருணகிரியார் அருள் வேண்டியபடி மறவாமல்,

"சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு
மன்றித் தளர்ந்தவர்க்கொன்
றீகைக்கெனை விதித்தாயிலையே"

என்ற உத்தமமான பலனையும் வேண்டலாம்.

—சித்தார்த்தம்

## விளம்பர விகிதம்

முதன்முறைக்கு

| | |
|---|---|
| ஒரு பக்கம் ரூபா 10-00 | அரைக்கலம் ரூபா [illegible] |
| கால்பக்கம் ரூபா 4-00 | ஒரு அங்குலம் ரூபா 1-00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

[illegible]


# கச வியாதிக்கு வசிலோசைன் மருந்து

(Cure For Consumption;- Bacillozine Specific)

பலவிதமான மருந்துகளைச் சாப்பிட்டும் வியாதி சுகப்படாமல் இருப்பதற்குக் காரணம் ரியுபெக்கிள் கிருமியின் தன்மைதான். வசிலோசைன் மருந்தினால் ரியுபெக்கிள் கிருமித் தன்மையுள்ளதும் இல்லாததுமான கசம், இருமல், தொய்வு, பீனிசம், முழங்கால் வாதம், சூலை வியாதிகளும், தலை, கண், காது, மூக்கு, முகம், வாய், தொண்டை, மூச்சுப்பை, இரத்தாசயம், ஈரல், கெற்பப்பை, சலப்பை, புண், பிளவைரோகங்களும் கெதியில் பூரண சுகத்தையடைகிறது மல்லாமல் வசிலோசைன் மருந்தைப் பாவிக்கத் தொடங்கிய 12 மணி நேரத்திற்குள் மனச் சந்தோஷத்தையும், ஊக்கத்தையும், புதிய பலத்தையும் ஆறுதலான நித்திரையையும் அடையலாம்.

வீ—பீயில் மருந்து பெறவோர் ரூபா இரண்டு முற்பணம் அனுப்பவும்.

15 நாள் மருந்து ரூபா 7—75

விலாசம்:— Dr. S. V. Tambiah,
Dutch Road, Uduvil, MANIPAY, P. O.

Y 17 27-4.42—26.4.43

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,36700
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் 9ரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y164 A. 21-11-41—20-11-42 (தி)

Y 115 18.5.42—17.8.42

# பிரதானமான அறிவித்தல்

லைசென்ஸ்பெற்ற பல்லுக்கட்டுபவரும் கண்பரிசோதகருமாகிய
மிஸ்றர். S. சாஸ் பத்திராஜு

இப்போது கிறைஸ்ட் சர்ச்சுக்கெதிரே மெயின்ஸ்ட்ரீட்டில் 43-ம் நம்பர் இல்லத்தில் இருக்கிறார்.

இவர் ஒவ்வொரு மாசத்திலும் 1-ந் திகதி தொடக்கம் 15-ம் திகதிவரை அங்கு இருப்பார்.

ஏனைய நாட்களில் பின்வரும்விலாசத்திற்குக் கடிதங்களை அனுப்புக தம்பராவாத் தோட்டம், வரியப்போலா, வடமேல்மாகாணம்.

# தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள், சிமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்

"புரோப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்

Y 19. 4-3-42——3-3-43


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Monday 22nd June, 1942.